# சுற்றுலாவிற்கான வளங்களும் வாய்ப்புக்களும் – ஓர் ஆய்வு வழுக்கையாற்றுப் படுக்கையினை அடிப்படையாகக் கொண்டது

**ஜெனீபன், ஜெ., சிவகுரு, ச.**
வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
Jenipan3994@gmil.com

வழுக்கையாற்றுப் படுக்கையினை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாவிற்கான வளங்களையும் வாய்ப்புகளையும் அடையாளப்படுத்தும் முகமாக அமைந்த இவ் ஆய்வானது. யாழ் மாவட்டத்தின், வலிகாமத்தில் காணப்படுகின்ற பருவகால ஆறாகிய வழுக்கையாற்றினை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு சுற்றுலாவிற்கான வளங்களையும், வாய்ப்புகளையும் ஆய்வு செய்கின்றது. வழுக்கையாறும் அதோடு இணைந்த நிலங்களும் பண்டுதொட்டு யாழ் மண்ணின் பண்பாடு உருவாவதற்கு பங்களிப்புச் செலுத்தியவையாகும். இங்கே காணப்படுகின்ற கந்தரோடை தொல்லியல் மையமானது அனுராதபுரம், பொலனறுவை ஆகியவற்றிற்கு நிகரான தொல்லியல் மையமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. வலிகாமம் வடக்கிலுள்ள மயிலிட்டி, ஆனைக்கோட்டை யில் காணப்படும் மனிதப்புதைபடிமங்கள் ஆகியன இப்பகுதியின் வரலாற்றுத் தொன்மையை எடுத்தியம்புவனவாக அமைகின்றன. யாழ்ப்பாணச் சுற்றுலாவில் காணப்படுகின்ற சுற்றுலாத் தளங்களுக்கான பற்றாக்குறையினை நீக்கும் நோக்கிலும், புதிய முதலீடுகளை சுற்றுலாவில் ஊக்கப்படுத்தும் நோக்கிலும் ஒரு புதிய வளவாய்பினைக் கண்டறிவதற்கான முனைப்போடு வழுக்கையாற்றுப் படுக்கையில் காணப்படுகின்ற இயற்கை மற்றும் பண்பாட்டம்சங்களை அடையாளப்படுத்தி அவற்றில் எவ்வாறான சுற்றுலா நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதற்கான திட்டமிடல்களை இவ் ஆய்வின் மூலம் முன்வைக்கின்றேன். இவ் ஆய்வினை முன்னெடுக்கும் முகமாக பல்வேறு மூலங்களில் இருந்து தரவுகளைப் பெறவேண்டியிருந்தது. அந்தவகையில் முதலாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக கள அவதானிப்பு மற்றும் கலந்துரையாடல்கள் ஆகியவற்றை மேற்கொண்டதோடு, இப்பகுதியின் பல்வேறு விதமான இடங்களை அடையாளம் காண்பதற்கும், அளவுகளை மேற்கொள்வதற்கும் வரைபட வேலைப்பாடுகளை மேற்கொண்டதோடு, தொல்லியல் மற்றும் வரலாறு சார்ந்த நூல்களில் இருந்து எனது ஆய்வுப் பகுதியின் பண்பாட்டுப் பின்புலங்களை பெற்றுக்கொண்டிருந்தேன். எதிர்காலத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு புதிய திட்டமிடல் முறைகள் பற்றிய இணையவழித் தரவுகளையும் பெற்றுக்கொண்டேன். இவ் ஆய்வின்பொழுது சுற்றுலாவிற்கான வள வாய்ப்புகளாக இவ் ஆய்வுப்பிரதேசத்தில் பருவகாலங்களில் மேற்கொள்ளக்கூடிய படகுச் சவாரி மற்றும் பறவைகளைப் பார்வையிடுதல், வயல் நிலங்களின்மீதான சுற்றுலா நடவடிக்கைகள் ஆகியவற்றை அடையாளப்படுத்தியதோடு பண்பாடு சார்ந்து காணப்படுகின்ற மிக முக்கியமான இந்து ஆலயங்கள், ஐரோப்பியர்கால கட்டமைப்புகள், பாரம்பரியமான சந்தைகள் மற்றும் யாழ்ப்பாணத்தின் மடப்பண்பாட்டிற்குரிய கட்டுமானங்கள் ஆகியவற்றையும் அடையாளப்படுத்தி, அவற்றை பார்வையிடுவதற்கான வழித்தடத் திட்டங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்வுப்பிரதேசம் பரந்த ஒன்றாக

காணப்படுகின்றமையால் வழுக்கையாற்றுப் படுக்கையில் காணப்படுகின்ற தனித்துவமான தாவரப்பல்வகமை மற்றும் இந்து ஆலயங்களின் பண்பாட்டுச் சிறப்புகள் மற்றும் ஆய்வு செய்யப்பட வேண்டிய தொல்லியல் மையங்கள், வழுக்கையாற்றின் சமதரை வடிகாலமைப்புமுறை, அதன் தற்போதைய நிலை ஆகிய பல்வேறு கோணங்களில் எதிர்காலத்தில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான தேவை காணப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:-** பருவகால ஆறு, மயிலிட்டி, மடப்பண்பாடு, சமதரை வடிகாலமைப்பு